
உண்மை சம்பவம்



# சாத்தானின் சாட்சியம் !

இக்கட்டுரை சங். மைக்கேல் முல்லர் *C.SS.R.* சுவாமி எழுதிய *"The Holy Sacrifice of the Mass"* என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. விசுவாசம் தளர்ந்திருக்கும் இக்காலத்தில் நமது பாரம்பரிய கத்தோலிக்க விசுவாசத்தில் உறுதியடைய நமக்கு இது தூண்டுகோலாக இருக்கும் என்பது நமது துணிவு! – ஆ.ர்.)

16-ம் நூற்றாண்டில் சத்திய திருச்சபை மாபெரும் பிளவை சந்தித்தது. புரொட்டஸ்டாண்ட் பிரிவினைகள் தோன்றி நமதாண்டவரின் தையல் இல்லாத அங்கியான கத்தோலிக்க திருச்சபையைக் கூறுபோட்டன. ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக ஜெர்மனியில் லூத்தரின் பிரிவினை, இங்கிலாந்தில் ஆங்கிலிக்கன் பதிதம், பிரான்ஸ் நாட்டிலோ கால்வீனிஸ தப்பறை என்று தோன்றி ஏறக்குறைய அனைத்து ஐரோப்பிய கத்தோலிக்க நாடுகளிலும் ஊடுருவலாயின.

பிரான்ஸ் நாட்டில் எழுந்த கால்வீனிஸ பதிதமும், அதனைப் பின்பற்றியவர்களின் அட்டூழியமும் கொஞ்சநஞ்ச மல்ல. இந்த பதிதர்கள் கத்தோலிக்க ஆலயங்களின் பீடங் களையும், தேவநற்கருணைப் பேழைகளையும் உடைத்து, திவ்விய நற்கருணையைக் களவாடிச் சென்று அவசங்கை செய்துவந்தனர். ஆலயங்களிலுள்ள பூசைப் பாத்திரங் களையும், பூசை உடுப்புக்கள், பூசைப் புத்தகங்களையும் எரித்து, அழித்துவந்தனர். பல இடங்களில் கத்தோலிக்க குருக்களையும், துறவியரையும் கொலை செய்துவந்தனர். பிரான்சில் மட்டுமே அப்போது சுமார் *20,000* தேவாலயங்கள் இந்த பதிதர்களால் இடிக்கப்பட்டன. துறவற மடங்களும், துறவியர் நடத்திவந்த மருத்துவமனைகளும்கூட தரைமட்டமாக்கப்பட்டன. சார்த் *(Chartres)* என்ற இடத்திலிருந்த எல்லா துறவிகளும் கொல்லப்பட்டனர். அதில் தப்பியோடிய ஒரு துறவி தீ வைத்து உயிரோடு கொளுத்தப்பட்டார். *Dauphiny* என்ற நகரில் மட்டும் *255* குருக்கள், *112* துறவிகள் கொலை செய்யப் பட்டனர். *900* நகரங்களும், கிராமங்களும் பிரான்ஸில் கால்வீனிஸ பதிதர்களால் தீக்கிரையாக்கப்பட்டன.

இது இப்படியிருக்க, பிரான்ஸ் தேசத்தின் விசுவாசமிக்க மேற்றிராணிமார்களும், குருக்களும் தங்களது மந்தையை விசுவாசத்தில் உறுதிப்படுத்த மிகுந்த பிரயாசைப்பட்டு வந்தனர். சத்திய விசுவாசத்தைக் காக்கும்படியாக சர்வேசுரனை மன்றாடி வந்தார்கள். இந்த சமயத்தில்தான் அதாவது 1566-ம் ஆண்டு பிப்ரவரி *8*-ம் நாளன்று *'Laon'* என்ற நகரில், ஒரே நேரத்தில் *1,50,000* மக்கள் கூடியிருந்த அந்தக் கூட்டத்தில், திருச்சபை அதிகாரிகள், நகர அரசு அதிகாரிகள் மற்றும் புரொட்டஸ்டாண்ட் கால்வீனிச பதிதர்கள் முன்னிலையில் நற்கருணை நாதரின் அற்புதப் புதுமை நிகழ்த்தப்பட்டது! சாத்தான், விசுவாசத்தை மறுதலித்த துறவியான மார்ட்டின் லூத்தரைப் பயன்படுத்தி பூசையை அழித்து, நற்கருணையில் சேசு கிறீஸ்துவின் உண்மைப் பிரசன்னத்தை மறுக்கச் செய்தது. ஆன்ம இழப்புகளை பெருமளவில் ஏற்படுத்தியது. சர்வேசுரனும் தமது பிரதான எதிரியான சாத்தானையே பயன்படுத்தி திவ்விய நற்கருணையில் தமது மெய்யான பிரசன் னத்தை நிரூபித்து எண்ணற்றப் பதிதர்களை மனந்திரும்பச் செய்தார். அத்தகைய உண்மை சம்பவம்தான் இது!!

*1565* நவம்பர் *8*-ம் நாளன்று நிக்கோலா ஆப்ரி *(Nicola Aubry)* என்ற கள்ளமற்ற பெண்ணை பெயேல்செபூப் மற்றும் *29* அசுத்த அரூபிகள் பீடிக்க கடவுள் அனுமதித்தார். இந்த பேய் பிடித்தலானது 1566 பிப்ரவரி *8*-ம் நாள் வரை நீடித்தது. அவளது பெற்றோர் பேய் பிடித்த அவளை சங். தே மோத்தா *(Fr. De Motta)* என்ற *Vervins*-ல் உள்ள பரிசுத்த குருவிடம் அழைத்து வந்தனர். திருச்சபை அனுமதிக்கும் பேய் ஓட்டும் சடங்கின் மூலம் பேயை விரட்டுவார் என்று நம்பினர். அவரும் பல தடவைகள் திருச்சிலுவையின் அருளிக்கத்தின் மூலமாக விரட்ட முயன்றார். ஆனால் வெற்றி கிடைக்க வில்லை. அச்சமயம், இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலால் நமதாண்டவரின் திரு இரத்தம், சரீரமாகிய சற்பிரசாதத்தின் மூலம் வெளியேற்ற முடிவு செய்தார். அதன்படி துவண்டு, தன்னிலையற்றுப் படுத்திருந்த அவளது உதடுகளில் திவ்விய நற்கருணையை வைத்தார். உடனே பசாசின் கட்டுகள் உடைபட பேய் பிடித்திருந்த நிக்கோலா சுயநினைவு பெற்றாள். பக்தியோடு திவ்விய நற்கருணையைப் பெற்றுக் கொண்டாள். ஆனால் முழு சுகம் பெறவில்லை.

### பேயோட்டம் துவங்கியது!

*1556*, ஜனவரி *3*-ம் நாளன்று அப்பகுதி மேற்றிராணி யார் *Vervins* நகருக்கு வருகை தந்தார். அதிகாரப்பூர்வமான பேயோட்டும் நிகழ்ச்சிக்கு அனுமதி வழங்கி தானே பேய் ஓட்டும் சடங்கினைத் துவக்கினார். ஆலயத்திலும், அதைச் சுற்றிலும் மக்கள் வெள்ளம் குழுமியிருந்தது. அப்போது மேற்றிராணியார், **"உன் பெயர் என்ன?"** என்று பேய் பிடித்த பெண்ணை நோக்கிக் கேட்டார். அதற்கு சற்று தயங்கிய சாத்தான் "நான் பெயேல்செபூப், பேய்களின் இளவரசன்.

லூசிபேருக்கு அடுத்த ஆள்'' என்று தீய அகங்காரத்துடன் பதில் கூறியது.

''உன்னுடன் எத்தனை பேர் இந்த பாவப்பட்ட பெண்ணின் உடலில் இருக்கிறீர்கள்'' என்க, ''இப்போது நாங்கள் 19 பேர்'' என்று பதிலளித்த சாத்தான், ''தொடர்ந்து, நாளைக்கு இது 20 ஆக மாறிவிடலாம். அதுமட்டுமல்லாமல், நான் நரகத்திலுள்ள அனைவரையும் எனது உதவிக்கு அழைக்க வேண்டியதிருக்கும்'' என்று இறுமாப்புடன் கூறியது.

உடனே மேற்றிராணியார், ''சர்வேசுரனின் நாமத்தி னாலும், அவரது வல்லமையினாலும் நான் உனக்கு கட்டளை யிடுகிறேன், நீயும் உன் தோழர்களும் உடனே வெளியேறு வாயாக'' என்று அதிகாரத் தொனியில் கூறினார்.

அதற்கு அந்த அசுத்த அரூபி, ''ஆமாம் நாங்கள் போவோம். ஆனால், இப்போது அல்ல. அதுவும் இங்கே அல்ல. இந்தப் பட்டணத்தில் எனது வேலை இன்னமும் முடிக்கப்படவில்லை'' என்று பதில் கூறியது.

ஆனாலும் மேற்றிராணியார், ''நற்கருணையில் நமது ஆண்டவரின் உண்மைப் பிரசன்னத்தின் வல்லமையால் உன்னை வெளியேற்றும் போது போய்தானே தீரவேண்டும் ...நீ எங்கெல்லாம் போவாய்?'' என்று கேட்டார்.

அதற்கு அந்த அசுத்த அரூபி, ''ஆஹா! நான் எங்கே போவேன் - எங்கே போனேன் என்பதை அறிய விரும்புகிறீரா? அப்படியா? சரி! நேற்று இரவு உம்மிடம் வந்தேன்'' என்று கேலியாகப் பதிலளித்தது. பிறகு முந்தின நாள் இரவில், தமது அறையில் ஏதோ சப்தத்தைக் கேட்ட மேற்றிராணியார் கூறிய அதே வார்த்தைகளைச் சொல்லிக் காட்டியது! ஆனாலும் அன்று பரிசுத்த தேவதிரவிய அநுமானத்தால் சாத்தான் விரட்டப்பட்டது. ஆனால் பசாசு வெளியேறிய போது, அந்த பெண்ணின் இடது கையையும், வலது காலையும் செயலிழக்கச் செய்து முறித்துப்போட்டது. இதனால் அவளது இடது கரம் வலது கரத்தைவிட நீண்டுபோனது. அதனை குணப்படுத்த முடியவில்லை. சாத்தானை இறுதியில் நிரந்தர மாக விரட்டும்வரை இந்த வேதனை அவளுக்கு நீடித்தது.

இதற்கிடையில் இந்த சம்பவம் பற்றிய செய்தி நகரமெங்கும் பரவ அநேக கால்வீனிஸ பதித போதகர்கள் தங்களது சீடர்களுடன் ''இந்த பாப்பு வேதத்தாரின் ஏமாற்று வேலையை முறியடிப்போம்'' என்று ஏளனம் பேசியவர் களாக பேயோட்டும் சடங்கு நடக்கும் இடத்திற்கு வந்தனர்.

அவர்கள் உள்ளே நுழைந்ததும்தான் தாமதம், சாத்தான் கேலியாக அவர்களுக்கு வணக்கம் செலுத்தி, அவர்கள் ஒவ்வொருவரின் பெயரையும் கூறி அழைத்தது. அவர்கள் தமக்குக் கீழ்படிந்தே அங்கு வந்தனர் என்றும் கூறி நகைத்தது. எதிர்பாராத கேலியான வரவேற்பைக் கண்ட புரொட்டஸ்டாண்டார் திகைத்துப் போனார்கள். ஆனாலும், அவர்களில் ஒருவர் சுதாரித்துக்கொண்டு தாம் கொண்டு வந்திருந்த புரொட்டஸ்டாண்ட் மத ஜெபப்புத்தகத்தை எடுத்து அதிலிருந்து மிகுந்த ஆடம்பரமாக, கம்பீரமாக வார்த்தைகளால் வாசிக்கத் தொடங்கினர். அவரது அந்த செயலைக் கண்ட நரகக் கூளி ஏளனமாகச் சிரித்தது. முகத்தை வேடிக்கையாக வைத்துக்கொண்டு ''ஓய்! ஆஹா... எனது நல்ல நண்பனே! உனது ஜெபங்களாலும் பாடல்க ளாலும் என்னை வெளியேற்றவா நினைக்கிறாய்! நல்ல வேடிக்கைதான் போ! ...அவை எனக்கு பயத்தை தரும் என்றா நினைக்கிறாய்? ...அவை என்னுடையவை. இது உனக்குத் தெரியாதா? நான்தானே அவைகளை எழுத உதவி செய்தேன்'' என்று கேவலமாகவும், ஏளனமாகவும் பேசியது!

அதனைக் கேட்டு திகைத்துப்போனாலும், அந்த பாதிரியார் ''...பார்! கடவுளின் நாமத்தால் உன்னை இந்தப் பெண்ணிடமிருந்து வெளியேற்றுவேன்'' என்று வீராப்புடன் கூற, உடனே பசாசு, ''நீயா? ...சர்வேசுரனின் பெயரால் வெளியேற்றுவாய்! ...சாத்தானின் பெயராலும்கூட என்னை வெளியேற்ற முடியாது! ஒரு சாத்தான் மற்றொரு சாத்தானை வெளியேற்றுவதை எங்கேயாவது கேள்விப்பட்டிருக்கிறாயா?'' என்று ஏளனமாகக் கேட்டது.

இதனைக் கேட்டதும் அந்த புரொட்டஸ்டாண்ட் போதகர் கோபமாக, ''ஏய்! நான் சாத்தானல்ல. நான் கிறீஸ்துவின் ஒரு ஊழியன்!'' என்று பதில் கூறினார். அதற்கு ''கிறீஸ்துவின் ஊழியரா! நீரா! உண்மையாகவா?!'' என்ற சாத்தான் கேலியாக ஊளையிட்டு, ''என்னைவிட நீ மோச மானவன் ...இதோ பார்! நான் விசுவசிக்கிறேன். ஆனால் நீ விசுவசிக்க விரும்புவதில்லை. அப்படிப்பட்ட நீயா! இந்த பாவப்பட்ட பெண்ணின் உடலிலிருந்து என்னை வெளியேற்ற முடியும் என்கிறாய் ...போ ...போய் முதலில் உன் இதயத்தி லுள்ள எல்லாப் பேய்களையும் வெளியேற்று'' என்று கூறியது.

அதைக் கேட்டு சற்று தளர்ந்துபோன அந்த போதகர் வெட்கித் தலைகுனிந்தவாரே வெளியேற எத்தனித்தார். போகும்போது ஜெபிக்கும் மேரையாக கண்களை உயர்த்தி ''ஓ! ஆண்டவரே! இந்த ஏழைப் பெண்ணுக்கு உதவி செய்யும்படி நான் உம்மை ஜெபிக்கிறேன்'' என்று கூறினார்.

உடனே அந்தப் பெண்ணின் உடலில் இருந்த அசுத்த அரூபி ''நான் லூசிபேரைப் பார்த்து இந்த மனிதனை விட்டு அகலாதேயும். அவனை உமது வல்லமைக்குள் கெட்டியாக எப்போதும் பிடித்துக்கொண்டு, இப்போது எப்படி அவனை ஆட்கொண்டிருக்கிறீரோ அதுபோல எப்போதும் அவரை விட்டுவிடாதேயும் என்று நான் ஜெபிக்கிறேன் ...போ! போய் உன் வேலையைப் பார்! நீங்கள் எல்லோரும் எனது ஆட்கள். நான் உங்கள் எஜமான். நீங்கள் என்னை விரட்ட வந்தீர்கள்!'' என்று புரொட்டஸ்டாண்ட் போதகர்களையும், அவர்களது சீடர்களையும் பார்த்து ஏளனமாகப் பேசி அனுப்பியது.

அநேக புரொட்டஸ்டாண்டார் சென்றுவிட்டாலும் சிலர் நடப்பவற்றை உள்ளம் பதைக்க திகிலோடு பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது குருவானவர் திவ்விய நற்கருணை ஏந்தி வரவும், இதுவரை அகங்காரமாகவும், திமிராகவும் பேசிய சாத்தான் இப்போது, பயந்து அச்சத்தால் பதறி, வேதனையால் துடித்தது. அதன் வேதனை நற்கருணையை அருகே கொண்டுச் செல்லச் செல்ல, அதிகரிப்பதால் அது போட்ட கூக்குரல், அழுகையைக் கேட்டு அப்படியே அந்த பதிதர்கள் திகைத்துப்

போனார்கள்! கடைசியாக அந்த அசுத்த அரூபி அந்த பெண்ணிடமிருந்து வெளியேறிய போது, அவள் பழைய நிலைக்கு வருவதையும் கண்டு வியந்தனர்.

அப்போது சங். தே மோத்தா சுவாமி ஆச்சரியத்தோடு திகைத்துப்போயிருந்த புரொட்டஸ்டாண்ட் போதகர்களைப் பார்த்து "போங்கள், புது சுவிசேஷத்தின் போதகர்களே போங்கள். இங்கு நீங்கள் கண்டவற்றையும் கேட்டவற்றையும் எல்லா இடங்களிலும் சொல்லுங்கள். பீடத்தின் பரிசுத்த தேவதிரவிய அநுமானத்தில் நமதாண்டவர் சேசு கிறீஸ்துநாதர் மெய்யாகவே உண்மைப் பிரசன்னமாக இருக்கிறார் என்பதை இனிமேலும் மறுக்காதீர்கள். போங்கள். சத்தியத்தை ஒத்துக் கொள்ள மனித சுயமரியாதைக்கு இடம் கொடாதிருங்கள்" என்று கூறினார்.

அதுமட்டுமல்லாமல், அதைத் தொடர்ந்து நடந்த பேய் ஓட்டும் சடங்குகளில் சாத்தான் தன்னை *Vervins* என்ற அந்த நகரிலிருந்து வெளியேற்ற முடியாது என்றது.

தாங்கள் 28 பேய்கள் இருக்கிறோம், அவர்களில் செர்பெர்யூஸ், அஸ்த்தாரோத் மற்றும் லீஜியோ ஆகியோர் சக்திவாய்ந்த பேய்கள் என்றும் சாட்சியம் கூறியது.

மற்றொரு சமயத்தில், பேயோட்டும் சடங்கின் போது கடைசியாக வெளியேறுவது எப்போது என்று கட்டாயமாகக் கூறும்படி நெருக்கிடை கொடுத்த குருவிடம், "பிற்பகல் 3 மணிக்கு" என்று அந்த சக்திவாய்ந்த மூன்று பேய்கள் கூறின. ஆனாலும் விடாமல் கேட்ட குரு "சரி! என்றைக்கு 3 மணிக்கு வெளியேறுவீர்கள்" என்று கேட்க பதில் இல்லை.

அப்போது பெயேல்செபூபும் ஊளையிடத் தொடங்கியது. அச்சத்தால் நடுங்கிய அந்த பாவப்பட்ட பெண்ணின் உடலில் அவன் முதல் தடவையாக நுழைந்த அந்த நேரத்தை சபித்தான். "ஆ! சர்வேசுரன் என்னை அனுமதித்தால் நான் உடனே வெளியேறிவிடுவேன்; ஆனால் என்னால் முடியாது. எனது வேலை இன்னமும் முடியவில்லை" என்று கூறினான். அதைக் கேட்ட குரு, "நீ கடைசியாக வெளியேறவிருக்கும் நேரம் உனக்குத் தெரியாது! அப்படித்தானே" என்று கூற, "ஆ! ...ஆம்! ஆனால் என்னை மட்டும் *Liesse* நகருக்கு எடுத்துச் செல்லமாட்டேன் என்று எனக்கு வாக்குறுதி கொடுத்தால் நான் உடனே போய்விடுவேன். ஒரு ஆண்டிற்கு மீண்டும் திரும்ப மாட்டேன் சரியா?" என்று நயந்து கேட்டது.

அதற்கு குரு, உனக்கு அத்தகைய வாக்குறுதிகளை வழங்குவதா ...சர்வேசுரன் மன்னிப்பாராக!" என்று கூறியவர், காட்டமான குரலில், "சர்வேசுரனுடைய உதவியால் இந்தக் கணத்திலிருந்து நீ வெளியேறுவாய்" என்று கூறி, திவ்விய நற்கருணையை கரத்தில் ஏந்தினார். அதனைக் கண்டு அசுத்த அரூபிகள் அலறித் துடித்தன.

## 1566, ஜனவரி 22 முதல் 24 வரையிலான நாட்களில்

குருக்கள் பாவப்பட்ட அந்தப் பெண் நிக்கோலாவை *Liesse* என்ற ஊரில் இருக்கும் நமதன்னையின் சேத்திரத்திற்கு திருயாத்திரையாக அழைத்துச்செல்ல தீர்மானித்தார்கள். அந்த பயணத்தை (பசாசுக்கள் செல்லப் பயந்த அந்த இடத்திற்கு) ஒவ்வொரு கட்டத்திலும் முடிந்தவரையில் அசுத்த அரூபிகள் தடுக்க முயன்றன. ஒரு தடவை விபத்து ஏற்பட்டது. மற்றொரு முறை வண்டியை இழுத்துச்சென்ற குதிரைகள் மேலும் செல்லாமல் அசையாமல் நின்றுவிட்டன. அநேகத் தடவைகள் பசாசுக்கள் மிகப் பயங்கரமான கொடிய சப்தங்களை எழுப்பின. அது இடியின் சப்தம் போல் இருந்தது. ஆனால், சாத்தானின் எல்லா தடைகளும் நற்கருணை ஆண்டவரின் வல்லமையாலும், பேயோட்டும் ஜெபங்கள், தவமுயற்சிக ளாலும் முறியடிக்கப்பட்டு, *Liesse* நகருக்கு பாதுகாப்பாக வந்து சேர்ந்தனர்.

மறுநாள், சங். தே மோத்தா சுவாமி அங்குள்ள தேவ அன்னையின் தேவாலயத்தில் எண்ணற்ற மக்களின் முன்னிலையில் தமது பேயோட்டும் சடங்கை துவக்கினார்: "இந்த பெண்ணின் உடலில் நீங்கள் எத்தனை பேர் இருக்கிறீர்கள்" என்று கேட்டார்.

"இப்போது நாங்கள் 30 பேர்" என்று அசுத்த அருபிகள் பதிலளித்தன. உடனே நிக்கோலா மீது மந்திரித்த தண்ணீரை தெளிக்க, அது அப்பெண்ணின் உடலில் பட்டதும், அதனுள் இருந்த பசாசுக்கள் தாங்க முடியாத அவல வேதனைக் குரல்களை எழுப்பின.

"வாழும் சர்வேசுரனின் ஊழியனாகிய நான் உனக்கு கட்டளையிடுகிறேன். நீயும் உனது கூட்டாளிகளும் உடனே இந்தப் பாவப்பட்ட பெண்ணின் உடலைவிட்டு வெளியேற வேண்டும்" என்று கூறினார்.

அதற்கு சாத்தான், "இல்லை! மாட்டேன்!" என்று பதிலளித்தது. மீண்டும் "என்னுடைய சகாக்கள் 26 பேர் மட்டும் வெளியேறுவார்கள். ஆனால், என்னைப் பொறுத்த வரை நான் போகமாட்டேன்" என்று உறுதியாகக் கூறியது.

உடனே குரு திவ்விய நற்கருணையைக் கையில் ஏந்தி சாத்தானுக்கு காண்பித்து, "என்றும் வாழும் சர்வேசுரனின் நாமத்தால் உனக்குக் கட்டளையிடுகிறேன்... இதோ, நீ விசுவசிக்கும் உன்னதரான எம்மானுவேலரின், நீ காணும் இந்த பிரசன்னத்தில் வாழும் சர்வேசுரனின் நாமத்தால் உனக்கு ஆணையிடுகிறேன்" என்று கூறினார்.

உடனே, "ஆம்! ஆம்!" என்று குலுங்கி ஊளையிட்ட சாத்தான், "அவரில் நான் விசுவசிக்கிறேன்" என்று ஒப்புக் கொண்டது. அதன் மூலம் தன்னை சர்வ வல்லவரான சர்வேசுரனின் சக்தி அப்படி சொல்லக் கட்டாயப்படுத்தியதை உணர்த்தியது.

குரு, "அவரது பரிசுத்த நாமத்தில் உனக்குக் கட்டளையிடுகிறேன். உடனடியாக இந்த உடலிலிருந்து வெளியேறு" என்று கூறினார். இந்த வார்த்தையாலும் குறிப்பாக திவ்விய நற்கருணையின் பிரசன்னத்தாலும் சாத்தான் பயங்கரமான தாக்குதலுக்கு உட்பட்டு துன்புற்றது. அதனால் நிக்கோலாவின் உடலை ஒரு பந்து போல சுருட்டி, அஞ்சத்தக்க வகையில் வீங்கச்செய்தான். ஒரு கணம் சுபாவத்துக்கு மேலான வகையில் அவளது உடல் நீண்டது. அவளது நாக்கு வெளியே நாடி வரையிலும் நீண்டு தொங்கியது.

அது கருமையான நிறமுடையதாகவும், தவளையின் நாக்கைப் போன்று மிக நீண்டும் இருந்தது. அவள் படும் துன்பத்தால் தூண்டப்பட்ட குரு, ''நீ உடனடி யாக வெளியேற இங்கே பிரசன்னமாகியிருக்கும் திவ்விய நற்கருணை ஆண்டவரின் நாமத்தினாலும் அவரது பிரசன்னத்தாலும் உனக்குக் கட்டளையிடுகிறேன். உடனே வெளியேறு '' என்று கூறினார்.

அதற்கு சாத்தான், ''சரி! ஆம்!! 26 பேர் இப்போது இந்த கணத்தில் வெளியேறக் கட்டாயப்படுத்தப்பட்டால் வெளியேறுவார்கள்'' என்று ஆங்காரமாக பதிலளித்தது.

அதே சமயம் அங்கு ஆலயத்தில் இருந்த மக்கள் பக்தியோடு மன்றாடத் துவங்கினார்கள். அதனால் சாத்தான் நிக்கோலாவின் உடலை பல்வேறு வகைகளில் அலைக்கழித்து துன்புறுத்தியபின் வெளியேறியது. இப்போது சுய நினைவுக்கு வந்த அவள் பக்தியோடு நற்கருணையை அருந்தியவளது முகம் சம்மனசு போல ஒளிர்ந்தது.

ஆனால், குருவானவர் இன்னமும் வெளியேறும்படி பசாசை தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருந்தார். எப்படி யாயினும் அவனை வெளியேற்றிட எல்லா வழிகளையும் கையாண்டார். இதனால் கோபாவேசங்கொண்டு கொதித் தெழுந்த சாத்தான் அவரை நோக்கி பற்களைக் கடித்தபடி, ''எனது தோழர்கள் 26 பேரை வெளியேற்றியது உமக்கு போதாதா? இந்த வீட்டின் (மாதா திருத்தலம்) பெண்மணி யின் மரியாதைக்கு இது போதும்! '' என்று கூறி உருமியது. சாத்தான், பெண்மணிக்கு என்று கூறியது பரிசுத்த கன்னி மரியாயைக் குறித்தே! அந்த சேத்திரத்தில் அவர்கள் தனிப் பட்ட முறையில் சங்கை செய்யப்படுகிறார்கள். மேலும் ''நான் தான் கூறினேனே! ''என்ற பசாசு, ''நீ இன்று நடு இரவு வரை இந்த சேத்திரத்தில் இருந்தாயானால், நீ ஒரு நூறு ஆண்டுகள் இங்கே இருந்தாலும் உன் கட்டளைக்கெல்லாம் பணிந்து நான் இங்கிருந்து வெளியேறமாட்டேன்'' என்று கூறியது.

அதற்கு சங். தே. மோத்தா சுவாமி, அப்படியென்றால், ''யாருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிவாய்?'' என்று கேட்டார்.

''லான் *(Laon)* மேற்றிராணியாரின் கட்டளைக் கெல்லாமல் நான் வெளியேறமாட்டேன் '' என்று கோபமாகக் கூறியது.

அன்று மாலையில் இருந்து ஆலயத்தின் கதவுகள் அனைத்தும் மறுநாள் காலை 5 மணி வரைக்கும் திறந்திருக் கும்படி குருவானவர் கேட்டுக்கொண்டார். அதோடு மக்களும் அதிகாலையிலேயே வந்து கூடி, ஜெபத்தில் தம்மோடு ஐக்கியமாக இருக்கும்படியாகவும் கேட்டுக்கொண்டார். இரவிலும் மக்கள் ஜெபித்துக்கொண்டிருப்பதைப் பார்த்த பசாசு வெறுத்தது, ஆலயத்தின் கதவுகள் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் திறக்காமல், ஒரு மணி நேரம் பிந்தி திறக்கும்படிச் செய்ய, ஆலய கோபுரத்தின் கடிகாரத்தை நிறுத்தியது.

இதற்கிடையில் நிக்கோலா *Pierrepont* என்ற இடத் திற்கு எடுத்துச்செல்லப்பட்டாள். அங்கு அவளைப் பீடித்திருந்த பசாசில் ஒன்றான லீஜியோ பரி. தேவதிரவிய அனுமானதைப் பயன்படுத்தி வெளியேற்றப்பட்டது. அவளை விட்டு வெளியேறிய அந்தப் பசாசு நிக்கோலாவின் வாயிலிருந்து கரும்புகையை வெளிவரச் செய்தும், தனது வெளியேற்றத்திற் கடையாளமாய் *beltry* மீதிருந்த சில ஓடுகளை உடைத்துப் போட்டுப் போனது.

இச்சமயத்தில் அசுத்த அரூபியின் தூண்டுதலால், கால்வீனியப் பதிதர்கள் நிக்கோலாவையும், அவளோடிருந்த நல்ல குருவானவரையும் கொன்றுபோட முயன்றனர். ஆனால் விசுவாசிகள் தக்க நேரத்தல் வந்து கொலையாளிகளை விரட்டி யடித்தார்கள்.

பிறகு நிக்கோலா லான் *(laon)* நகருக்குக் கொண்டு வரப்பட்டாள். அவளது பேய்பிடித்த நிலையை கேள்விப் பட்ட மக்கள் பயந்துபோய் தங்கள் வீடுகளுக்குள் புகுந்து வீட்டின் கதவுகளை மூடிக்கொண்டார்கள். எங்கே சாத்தான் தங்களது மிகவும் இரகசியமான பாவங்களை வெளிபடுத்தி விடுமோ என்று அஞ்சிய மக்களில் யாரும் அவளை தன் வீட்டில் ஏற்றுக்கெள்ள விரும்பவில்லை.

கடைசியில் ஒரு விடுதி சொந்தக்காரனுக்கு மிகுந்த பணம் கொடுத்து அந்த இரவு மட்டுமே தங்க அனுமதிக்கப் பட்டாள். விடுதி ஆலயத்துக்கு சமீபமாய் இருந்தது.

மறுநாள் காலையில் ஆலயத்துக்கு நிக்கோலா கொண்டு வரப்பட்டாள். அவள் விடுதியைவிட்டு வெளியேறியதும் உடனே பசாசு அவளை மீண்டும் பிடித்துக்கொண்டது.

நிக்கோலாவிற்கு பேயோட்டும் சடங்கை நிகழ்த்தும் படி கேட்டுக்கொண்ட மேற்றிராணியார் நீண்ட நேரம் ஜெபித்தும், உபவாசம், ஒருத்தல்களால் தன்னையே தயாரித் திருந்தார். சர்வேசுரனையும், அவரது நல்ல தாயார் பரிசுத்த கன்னிமரியாயையும் தமக்கு உதவும்படி மன்றாடியவாறு ஆலயத்தில் காத்திருந்தார்.

நிக்கோலா ஆலயத்திற்குள் வந்ததுமே, பேயோட்டும் சடங்கு ஆரம்பமாகியது. ஜெபித்தவாறே மேற்றிராணியார் ''இந்த பெண்ணின் உடலில் நீங்கள் எத்தனை பேர் இருக்கிறீர்கள்? '' என்று கேட்டார். அதற்கு நாங்கள் மூன்று பேர்கள் என்று அசுத்த அரூபி கூறியது. ''உங்கள் பெயர்கள் என்ன? '' மேற்றிராணியார் கேட்க, ''Beelyebuls, Cerberus மற்றும் Astavoth''என்று பதிலளித்தது சாத்தான்.

''மற்றவர்கள் என்ன ஆனார்கள்?'' என்று மேற்றி ராணியார் வினவ, ''அவர்கள் வெளியேற்றப்பட்டு விட்டனர்'' என்று சாத்தான் பதிலளித்தது.

''யார் அவர்களை வெளியேற்றியது? '' என்று மேற்றி ராணியார் கேட்டதும், உடனே ''ஹா!'' என்று அலறிய சாத்தான், பற்களைக் கடித்தவாறு, ''நீர் தட்டில் இங்கே உமது கையில் எடுத்துள்ளீரே அவ தான்! '' என்று கூறியது. (சாத்தான் மிகவும் பரிசுத்த தேவதிரவிய அநுமானத்தில் நமது ஆண்டவரைத்தான் இப்படிக் கூறியது.)

மேற்றிராணியார் தொடர்ந்து, ''வெளியேற்றப்பட்ட வர்களின் பெயர்கள் என்ன?'' என்று கேட்டார்.

அதற்கு ஆங்காரமான பசாசு, "அது உமக்கு எதற்கு!? அவர்கள் என்னுடைய நாய்கள். என்னுடைய அடிமைகள். அவர்களுக்கு பெயர் கிடையாது" என்று பதிலளித்தது.

"சரி! இப்போது என்னுடன் பேசுவது யார்? என்று மேற்றிராணியார் கேட்டார். உடனே பசாசுக்களின் இளவரசன் பெயேல்செபூபுப்!" என்று இருமாப்புடன் கூறியது.

"மற்ற இருவரும் பேசட்டும்" என்று கூறினார் மேற்றிராணியார். அதற்கு ஆங்காரமாக, "அவர்கள் பேச மாட்டார்கள்" என்று பசாசு பதிலளித்தது.

இப்போது மேற்றிராணியார் மிகுந்த கம்பீரமான அதிகாரக்குரலில் மற்ற இரண்டு பேர்களான *Cerberus* மற்றும் *Astavoth* -ம் பேசும்படி உத்தரவிட்டார்.

இதனால் எரிச்சலடைந்த பெயேல்செபூபுப், "உமது தொண்டை கிழியும் வரையிலும் நீர் பேசலாம்" என்று கூறிய பின்னர், "நான் தான் சொல்லவில்லையா, அவை எனது முன்னிலையில் பேசமாட்டார்கள் என்று! ஏனெனில் அவர்கள் எனது வேலைக்காரர்கள், எனது அடிமைகள். நான் அவர்களது எஜமான். தன் எஜமானின் முன்பாக ஒரு அடிமை பேசி எங்காவது கேட்டிருக்கிறீரா?" என்று இளக்காரமாகக் கூறியது.

அதற்கு மேற்றிராணியார், "நான் கட்டாயப்படுத்தி பேச வைப்பேன். அவர்கள் சர்வேசுரனுக்கு கீழ்படிய வேண்டும்" என்று கூறினார்.

"மிக்க நல்லது! அவர்கள் சர்வேசுரனுக்குக் கீழ்படி வார்கள்; ஆனால் உம்மிடம் கூறியபடி அவர்கள் பேசமாட் டார்கள். நான் இங்கே இதற்காகத்தான் இருக்கிறேன். கேட்க வேண்டியதை கேளும். நான் பதில் சொல்கிறேன்" என்று பசாசு கூறியது.

மேற்றிராணியார், "சரி! எப்போதுதான் இந்த பாவப்பட்ட பெண்மணியின் உடலிலிருந்து வெளியே றுவாய்?" என்று கேட்டார்.

"Astavothஅடுத்த ஞாயிறன்று வெளியேறுவான்" என்றது அசுத்த அரூபி.

உடனே மேற்றிராணியார், "இல்லை. நீ இந்த கணத்திலேயே வெளியேற வேண்டும்" என்று கூறினார். "உடனே இல்லை. மாட்டேன். நான் வெளியேறப் போவதில்லை" என்ற பதிலளித்தது சாத்தான்!

மேற்றிராணியார் திவ்விய நற்கருணையை ஏந்தியவராக நிக்கோலாவின் முகத்தருகே நெருங்கினார். உடனே பின்னோக்கி விலகிய சாத்தான் கொடூரமாக துடி துடித்துப்போய், "சரி! சரி!! நான் போகிறேன்! நான் போக விடும்" என்று கூறியவன், சற்று நிதானித்து "...ஆனால் நான் மீண்டும் திரும்ப வருவேன்" என்று இடக்காகக் கூறினான்.

இப்போது நிக்கோலா உயிரற்ற சடலம்போல் விரைத்து அசைவற்று கிடந்தாள். மேற்றிராணியார் திவ்விய நற்கருணையை எடுத்துக்கொண்டு போய் அவளது உதடுகளில் தொட்டதும், உடனே சுய உணர்வு பெற்றவளாக எழுந்து அமர்ந்தாள். பக்தியோடு நற்கருணை உட்கொண்டாள். அப்போது அவளது முகம் பிரகாசமாய் அசாதாரண அழகோடு விளங்கியது.

மறுநாளும் வழக்கம்போல் பேயோட்டும் சடங்கினை மேற்றிராணியார் துவக்கினார். தீர்த்தத்தை அவள்மீது தெளித்தார். உடனே, "ஏய்! போப்பு, வேத அசிங்கம் பிடித்தவரே" என்று கத்தி உடலைச் சுருக்கி துடித்து கோபாவேசம் கொண்ட சாத்தான் "உமது உப்புத் தண்ணீரைக் கொண்டு போரும்" என்று கத்தி, தீர்த்தத்தண்ணீர் மீதான தனது கடுமையான வெறுப்பைக் காட்டித் துப்பியது. இப்போது மேற்றிராணியார் அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தின் ஒரு பகுதியை எடுத்து வாசிக்கத் துவங்கினார். சாத்தான் அவரைக் கேலி செய்து அவர் வாசிப்பதை அப்படியே அதே தொனியில் அச்சுப்பிசகாமல் சொன்னது.

பிறகு மேற்றிராணியார் திவ்விய நற்கருணையை கையில் ஏந்தியவாறு நிக்கோலாவின் முகத்தருகே கொண்டுசென்றவாறே, "... என்றும் வாழும் சர்வேசுரனின் நாமத்தால் நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். பீடத்தின் தேவதிரவிய அநுமானத்தில் சேசு கிறீஸ்துவின் உண்மைப் பிரசன்னத்தின் பெயரால் கூறுகிறேன், சர்வேசுரனுடைய இந்த சிருஷ்டியின் உடலிலிருந்து உடனே வெளியேறு, மீண்டும் திரும்ப வரக்கூடாது" என்று கூறினார்.

"இல்லை, இல்லை" என்று சிலிர்த்த சாத்தான், "நான் போக மாட்டேன். என் நேரம் இன்னும் வரவில்லை" என்று கூறியது.

"நான் போகும்படி கட்டளையிடுகிறேன். போ! கெட்டுப்போன அசுத்த அரூபியே! போய் விடு!" என்று கூறி நற்கருணையை நிக்கோலாவுக்கு அருகே கொண்டுசென்றார்.

"நில்! நில்!" என்று கூறிய சாத்தான், "என்னைப் போகவிடும். நான் போகிறேன். ஆனால் திரும்ப வருவேன்" என்று கூறவும், நிக்கோலா அசைவற்று விழுந்தாள். அவளது வாயிலிருந்து கரும்புகைக் கிளம்பியது!

பின்னர் நிக்கோலா *Laon*-ல் தங்கியிருக்கையில் கத்தோலிக்க மற்றும் புரொட்டஸ்டாண்ட் மருத்துவர்கள் அவளை நன்கு பரிசோதனைச் செய்தனர். அவளது இடது கையை சாத்தான் செயலிழக்கச் செய்திருந்தான். மருத்துவர்கள் அந்தக் கரத்தைக் கத்தியால் கீறினாலும், நெருப்பினால் சுட்டாலும் அல்லது நகக்கண்ணில் ஊசியால் குத்தினாலும் அவளுக்கு எந்தவிதமான வலியோ உணர்வோ ஏற்படவில்லை. அந்தக் கை முழுவதுமாக விளங்காமல் போயிருந்தது. புரொட்டஸ்டாண்ட் மருத்துவர்கள் தங்களது ஆலயத்தி லிருந்து கொண்டுவந்த அப்பத்தை இரசத்தில் தோய்த்து கொடுத்தனர். (புரொட்டஸ்டாண்டார் அதனை நற்கருணை அல்லது ஆண்டவரின் இராவுணவு என்கிறார்கள். ஆ.ர்). அது அவளிடம் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. உடல் விரைத்து பளிங்கு கல்லைப்போல் இறுகிப்போயிருந்தது. கடைசியில் கத்தோலிக்கக் குருவானவர் திவ்விய நற்கருணை யால் அவளது உதடுகளைத் தொட்டவுடனே அவள் தன் சுயநினைவுக்கு வந்தாள். பக்தியோடு சர்வேசுரனைத் துதிக்கத் துவங்கினாள்.

இந்தப் புதுமையைக் கண்ட கால்வீனிச மருத்துவர் உடனடியாக மனந்திரும்பினார். தமது தப்பறைகளை மறுத்து விட்டு கத்தோலிக்கரானார். புரொட்டஸ்டாண்ட் பாதிரியார்களால் பல தடவைகள், வசீகரிக்கப்படாத அப்பத்தால் *(Host)* நிக்கோலாவின் முகத்தில் தொட்டும், அது வெறும் அப்பமாகவே இருந்ததால் எவ்வித மாற்றத்தையும் அவளிடம் ஏற்படுத்தவில்லை. சாத்தான் அதனால் எந்தவொரு தொந்தரவையும் அடையாததால், அவன் அவர்களைக் கேலி செய்தான்.

ஜனவரி 27-ம் நாளன்று, மேற்றிராணியார் குருக்களோடும் விசுவாசிகளோடும் ஆடம்பர பவனியாக ஆலயத்தினுள் நுழைந்தார். அங்கே அதிகமான எண்ணிக்கையில் கத்தோலிக்கர்களும், புரொட்டஸ்டாண்ட்டாரும் குழுமியிருக்க பேயோட்டும் சடங்கு துவங்கியது.

"உயிருள்ள சர்வேசுரனின் நாமத்தால் உனக்குக் கட்டளையிடுகிறேன்" என்று கம்பீரமாகக் கூறிய மேற்றிராணியார், "நான் கேட்கும் அனைத்திற்கும் உண்மையான பதிலைக் கூறவேண்டும்" என்றார். அதற்கு அசுத்த அரூபி, "கேளும். நான் பதில் கூறுகிறேன்" என்றது.

"இப்போது பேசும் நீ யார்?"

"அது நான்தான்."

"உன் பெயர் என்ன?"

"நான்தான் முன்பே கூறினேனே. என் பெயர் பெயேல் செபூப்!"

"உன்னோடு இருப்பவர்கள் யார்?"

"அஸ்டாரோத்தும், செர்பர்யூஸும்தான்."

"சர்வேசுரனுடைய சிருஷ்டியான இந்தப் பெண்ணின் உடலிலிருந்து எப்போது வெளியேறப்போகிறீர்கள்?"

"அஸ்டாரோத் முதலில் வெளியேறுவான். அவனது நேரம் குறிக்கப்பட்டுவிட்டது. ஆனால் நான் இருப்பேன்."

"அவன் வெளியேறினானா என்பதற்கு என்ன அடையாளம் தருவான்?" என்று மேற்றிராணியார் கேட்டார்.

"ஜன்னல் கண்ணாடியை உடைப்பான். அதன் ஒரு துண்டை எடுத்துச்செல்வான்" என்றது சாத்தான்.

"அவன் எங்கே செல்வான்?"

"போதிய ஆட்கள் கைவசம் இருந்தால், உங்கள் எல்லோரையும் கொன்றுவிட விரும்பும் எனது பெருமை மிக்க கால்வீனிச கேப்டன் டான்டெலோட்டிடம் செல்வான்."

"ஏன் இந்த பாவப்பட்ட எளிய சிருஷ்டியின் உடலை ஆட்கொண்டாய்?"

"ஏனெனில், எனது கால்வீனிசர்களை உறுதிபடுத்தவோ அல்லது மனம் மாறச் செய்யவோதான் இதை செய்கிறேன். திரு இரத்தத்தின் மேல் ஆணையாகச் சொல்கிறேன்: அவர்களை கடைசி எல்லை வரைக்கும் கொண்டுச்செல்வேன்" என்று பதிலளித்தது சாத்தான்.

பிறகு மேற்றிராணியார் பெயேல்செபூப், அஸ்டாரோத், செர்பர்யூஸ் என்ற பெயர்கள் எழுதப்பட்ட தாளை மந்திரித்த மெழுகுதிரியால் எரித்து, "ஓ! சர்வேசுரனால் சபிக்கப்பட்ட அசுத்த அரூபியே! நீங்கள் நித்திய தண்டனைக்குத் தீர்ப்பிடப்பட்டதன் அடையாளமாக உங்களது பெயர்கள் நெருப்பிட்டு எரிக்கப்படுகின்றன. இந்த உடலிலிருந்து நீங்கள் வெளியேறும்வரை துன்புறுத்தப்படுவீர்கள்" என்று கூறினார்.

உடனே பசாசு உடல் நடுங்கி, அச்சமூட்டும் வகையில் வேதனைக்குரல் எழுப்பியது. மூன்று வித்தியாசமான குரல்கள் தெளிவாக நிக்கோலாவிடமிருந்து வந்தன. அவை மாடு போல் கத்தும், நாய் போல் குரைக்கும், ஸ்வைன் என்னும் மிருகம் போல் ஊளையிடும் சப்தங்களாக இருந்தன.

இப்போது மேற்றிராணியார் திவ்விய நற்கருணையை ஏந்தியவராக நிக்கோலாவின் முகத்தருகே அதனைக் கொண்டு சென்றார். அப்போது, இந்த உலகைச் சாராத கருப்பாகவும், அடர்த்தியாகவுமுள்ள புகை மண்டலம் அவளிடமிருந்து எழுந்தது. அஸ்டாரோத் பேய் முற்றிலுமாக வெளியேற்றப்பட்டது. அதே சமயம் ஆலய ஜன்னல் கண்ணாடி தெறித்து உடையும் சப்தம் கேட்டது. கண்ணாடித் துண்டு ஒன்று கொண்டுசெல்லப்பட்டது. நிக்கோலா அப்படியே கீழே விழுந்தாள். திவ்விய நற்கருணையின் பிரசன்னத்தால் மீண்டும் சுய நினைவை அடைந்தாள்.

"ஏய்! சபிக்கப்பட்ட அரூபியே! உன்னை வெளியேறும்படிக் கட்டாயப்படுத்த ஜெபத்தையோ, பரிசுத்த வேதாகமத்தையோ, பேயோட்டும் சடங்கையோ, அர்ச்சிஷ்ட பண்டங்களையோ *(Relic)* கொண்டுவரவில்லை. மாறாக, இப்போது உனது ஆண்டவரும், எஜமானருமானவரையே காட்டப்போகிறேன். அவரது வல்லமையால் நான் உனக்கு ஆணையிடுகிறேன்" என்று மேற்றிராணியார் கூறினார்.

அதற்கு குறுக்கிட்ட சாத்தான், "என்ன சொல்கிறீர்? அதற்கு என்ன அர்த்தம்?" என்று கோபத்தாலும், ஆங்காரத்தாலும் அதிர்ந்தவாறு பற்களை நற நறவென்று கடித்தது. "எதனால் என்னை வெளியேற்றப்போகிறீர்? உமது அந்த வெள்ளை... யாலா?" என்று கேட்டது. (இங்கே சாத்தான் மிகக் கடுமையான சொல்லால் கூசும் வார்த்தைகளால் பரிசுத்த தேவதிரவிய அநுமானத்தைக் குறிப்பிட்டது).

அதனால் கோபமடைந்த மேற்றிராணியார், "ஏய்! ஆசீர்வதிக்கப்பட்ட ஆண்டவரை எப்படி நீ அந்த பெயரிட்டு அழைக்கத் துணிந்தாய்?" என்று கேட்டுக் கண்டித்தார்.

"ஹா! ஹா! எனது கால்வீனிசர்களும் அவரை அழைக்கும்படி கற்றுக்கொடுத்த பட்டப்பெயரால்தான்" என்று திமிராக பதிலளித்தது சாத்தான்.

மேற்றிராணியார், "ஏன் அவருக்கு நீ மிகவும் அஞ்சுகிறாயா? அவரது முகத்திற்கு முன்பாக பயந்து ஓடுகிறாயே ஏன்?" என்று கேட்டார்.

அதற்கு சாத்தான், "ஆ!" என்று நடுங்கினான். பின்னர் "அது... அந்த "hoc", "hoc" என்ற வார்த்தை என்னை ஓடிப்போகக் கட்டாயப்படுத்துகிறது" என்று பதில் கூறியது.

(இங்கே சாத்தான் குறிப்பிடும் அந்த வார்தை , பூசையில் அப்ப இரசத்தை சேசுவின் திருச் சரீரமாகவும், இரத்தமாகவும் மாற்றமடையச் செய்யும் வசீகர வார்த்தைகளே).

அதைத் தொடர்ந்து நடைபெற்ற திவ்விய பலி பூசையின் எல்லா நேரத்திலும் சப்தமாக அரற்றிக்கொண்டிருந்த சாத்தான், அப்ப இரச வசீகரத்தின்போது உடனே மௌனமாகியது. ஆனால் இப்போது நிக்கோலா மிகவும் அஞ்சத்தக்க வகையில் திமிறலானாள். அந்தரத்தில் அப்படியே மிதக்கலானாள்! திடகாத்திரமான 15 பேர்கள் அவளைப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். பசாசின் வலிமை எந்த அளவுக்கு கடுமையாக இருந்ததென்றால், அவளது திமிறலால் அவளைப் பிடித்திருந்த மனிதர்கள் சிதறியோடினர். அவளது முகம் பீடத்தை நோக்காமல் ஆறு அடி உயரத்திற்கு வசீகரம் முடியும் வரையிலும் அந்தரத்தில் மிதந்தவாறே இருந்தாள். வசீகரம் நிறைவடைந்ததும், அவள் கீழே பொத்தென்று விழுந்தாள்.

பூசைக்குப் பின்னர் நடத்தப்பட்ட பேயோட்டும் சடங்கில் மேற்றிராணியார் திவ்விய நற்கருணையை ஏந்தியவராக, "ஓ! சபிக்கப்பட்ட அரூபியே! ஆசீர்வதிக்கப்பட்ட சர்வேசுரனின் நித்திய பிரதான எதிரியே! இங்கே பிரசன்னமாயிருக்கிற சேசு கிறீஸ்துவின் விலைமதிப்பில்லாத திரு இரத்தத்தினால் நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். இந்த பரிதாபமான பெண்ணிடமிருந்து போய்விடும்படி ஆணையிடுகிறேன். சபிக்கப்பட்டவனே, விலகிப்போ. என்றும் அவியாத நரக நெருப்பிற்குள் செல்! சாத்தானே!" என்று கூறினார்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதாலும், திவ்விய நற்கருணையைக் கண்ட மாத்திரத்திலும் அஞ்சத்தக்க வகையில் நொறுக்கப்பட்டான் சாத்தான். அதன் விளைவால் நிக்கோலாவின் தோற்றம் மிகவும் கொடூரமாக மாறிப்போனது. இதனைக் கண்டு சுற்றிலுமிருந்த மக்கள் அஞ்சி தங்களது கண்களைத் திருப்பிக்கொண்டனர். இறுதியில் பெரிய சப்தம் கேட்க, அவளது வாயிலிருந்து கருமையானப் புகை மேகம் போல் வெளிவரலாயிற்று!

செர்பரூஸ் சாத்தான் வெளியேற்றப்பட்டது. அவன் வெளியேறியபோது, ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல ஆலய ஜன்னல் கண்ணாடியை உடைத்து, அதன் ஒரு துண்டினை எடுத்துச் சென்றது. இப்போது நிக்கோலா செத்தவளைப் போல அசைவற்றுக் கிடக்க, திவ்விய நற்கருணைப் பிரசன்னத்தால் மீண்டும் சுயநினைவுக்குக் கொண்டுவரப்பட்டாள்.

பின்னர் பிப்ரவரி 7-ம் நாளன்று மீண்டும் பேயோட்டும் சடங்கு நடைபெற்றது. அன்றைய சடங்கின்போது மேற்றிராணியார் சாத்தானிடம், "நீ வெளியேறும்போது எத்தகைய அடையாளத்தைத் தருவாய்?" என்ற கேட்டார். அதற்கு அவன் "செயலிழக்கச்செய்த நிக்கோலாவின் இடது கையை குணப்படுத்துவேன். இது அற்புதமான புதுமை இல்லையா? நீங்கள் ஆலயத்தின் உச்சியில் மற்றுமொரு அடையாளத்தைக் காண்பீர்கள்" என்று கூறியது.

உடனே மேற்றிராணியார், "இந்த சரீரத்தை ஆட்கொண்டதால் உனக்கு என்ன நன்மை கிடைக்கும்? அநேகர் திவ்விய நற்கருணையின் வல்லமையைக் கண்டதால் மனந்திரும்புவார்கள். உடனே வெளியேறு! இங்கேயிருக்கும் ஒவ்வொருவரும் உன்னை வெறுத்து, ஒதுக்குகிறார்கள்" என்று வேகமாகக் கூறினார்.

அதற்கு சாத்தான், "அதை நான் அறிவேன். அநேகர் மனந்திரும்புவார்கள்; ஆனால் பலர் தங்கள் பாவங்களில் இறுகிப்போவார்கள்" என்றது.

"பிறகு ஏன் இந்த கண்ணியமான புண்ணியம் நிறைந்த கத்தோலிக்கப் பெண்மணியை பிடித்துக்கொண்டாய்?" என்று கேட்டார் மேற்றிராணியார்.

"நான் சர்வேசுரனுடைய அனுமதியின்பேரிலேயே அப்படி பீடித்தேன். மக்களின் பாவங்களை முன்னிட்டே இந்தப் பெண்ணைப் பீடித்தேன். பசாசுக்கள் இருக்கிறார்கள். கடவுள் அனுமதித்தால் மனிதர்களை அவர்களால் பீடித்துக் கொள்ள முடியும் என்பதை எனதருமை கால்வீனியர்களுக்குக் காட்டுவதற்காகத்தான் இதனைச் செய்தேன். அவர்கள் இதனை நம்ப விரும்பமாட்டார்கள் என்று தெரியும். ஆனாலும் நான் பசாசு என்பதை அவர்களுக்குக் காண்பிப்பேன். அவர்களை மனந்திருப்புவதற்காக அல்லது அவர்கள் தங்கள் பாவங்களில் இறுகிப்போகவே நான் இந்த சிருஷ்டியைப் பிடித்துக் கொண்டேன்" என்று கூறியது.

இந்தப் பதில் கேட்டவர்களை மிகுந்த பயத்தில் ஆழ்த்தியது. அதற்கு மேற்றிராணியார், "ஆம்!" என்று கூறியவர், கம்பீரமான குரலில், "எல்லா மனிதர்களையும் ஒரே பரிசுத்த விசுவாசத்தில் இணைக்க சர்வேசுரன் விரும்புகிறார். எப்படி ஒரே சர்வேசுரன் இருக்கிறாரோ அப்படியே ஒரே சத்திய வேதம்தான் இருக்க முடியும். வேதம் போல் தோற்றமளிக்கும் புரொட்டஸ்டாண்ட்டாரின் கண்டு-பிடிப்பான அது கேலிக்குரிய ஒன்றே! அது மறைய வேண்டும். நமதாண்டவர் சேசு கிறீஸ்துவால் ஏற்படுத்தப்பட்ட ஒரே வேதம் **சத்தியவேதம்** மட்டுமே. அது எக்காலத்திற்கும் இருக்கும். தெய்வீக ஆளான நமதாண்டவர் சேசு கிறீஸ்துவே காணக்கூடாத வகையில் பரிசுத்த ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவராக இருக்கிறார். அவரது காணக்கூடிய தலைவராக அர்ச். இராயப்பரின் வழிவந்த நமது பரிசுத்த தந்தை பாப்பரசர் ஆவார்" என்று கூறினார்.

அப்போது அமைதி காத்த பசாசு, சுற்றிலும் நிற்பவர்களின் மத்தியில் வெட்கத்தோடு மௌனமாக நின்றது. பின்னர் மேற்றிராணியார் திவ்விய நற்கருணையை ஏந்திவர மீண்டும் ஒருமுறை வெளியேற்றப்பட்டது.

ஆனால் அதே நாளில் பிற்பகலில் நடைபெற்ற பவனியின்போது சாத்தான் மீண்டும் தமது குரலை உயர்த்தியது! "ஹா! ஹா!" என்று கத்திய சாத்தான், இப்படியே என்னை நீர் வெளியேற்ற முடியும் என்று நினைக்கிறீரோ? இங்கே எந்த ஒரு மேற்றிராணியாரும் (கால்வீனிசர்) சரியாக வருவதில்லையே. எங்கே அந்த டீனும் அவரது மேலதிகாரியும்? அரச நீதிபதிகள் எங்கே? முதன்மை மாஜிஸ்ட்ரேட்டும் அரசு

ஆலோசகரும் எங்கே? ஹா! அன்று அந்த இரவில் - சிறையில் அவள் கூறிய நகைச்சுவையினால் பயந்துபோன முதன்மை மாஜிஸ்ட்ரேட் எங்கே? அரசு காசாளர் எங்கே? அட்டார்னி கவுன்சிலர்கள் எங்கே? நீதிமன்ற கிளார்க் எங்கே போய்விட்டான்?!" என்று அனைத்து அரசு அதிகாரிகளையும் அவர்கள் ஒவ்வொருவரின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டது. "இவர்கள் எல்லோரும் இங்கே கூடிவராதபட்சத்தில் நானும் வெளியேறப்போவதில்லை. நான் இப்போது வெளியேறினால் அரசனுக்கு இங்கே நடந்ததைப்பற்றிய சான்றை உங்களால் கொடுக்க முடியுமா? நீங்கள் கூறுவதைத்தான் மக்கள் எளிதாக நம்பிவிடுவார்கள் என்று நினைக்கிறீர்களா? இல்லை. இல்லவேயில்லை! ...நிறைய சந்தேகங்களை எழுப்புவார்கள். ...மறுப்புக்களைக் கூறுவார்கள். ஆனால் பொதுவாக நாட்டுப்புற எளிய மக்களின் சாட்சியம் சற்று ஏற்புடையதாக இருக்கும். இப்படியெல்லாம் பேசுவதும், செய்வதும் எனக்கு மிகுந்த துன்பத்தைத் தருவதாக இருக்கிறது. நான் இதனைச் செய்யக் கட்டாயப்படுத்தப்படுகிறேன். ஹா! இந்த கேடுகெட்டவளை பீடித்த அந்த முதன்முதலான நேரம் சபிக்கப்பட்டது!" என்று தன்னையே கடிந்து, சபித்துக் கொண்டது சாத்தான்.

இதைக் கேட்ட மேற்றிராணியார், "நீ இப்படி சலித்துக்கொள்வது எனக்கு சற்று மகிழ்ச்சியைத் தருகிறது" என்றவர், பின்னர், "இங்கே போதுமான சாட்சியங்கள் இருக்கிறார்கள். நீ குறிப்பிட்ட அதிகாரிகள் தேவையில்லை. ஆகவே வெளியேறு. சர்வேசுரனை மகிமைப்படுத்து. போ! நரக நெருப்பிற்குச் செல்!" என்று கட்டளையிட்டார்.

"ஆம்! நான் போய்விடுவேன். ஆனால் இன்றைக்கு அல்ல. நான் வெளியேறவேண்டும் என்பதை நன்றாக அறிவேன். எனக்குரிய தீர்ப்பு இன்னமும் விதிக்கப்படவில்லை. நான் வெளியேற கட்டாயப்படுத்தப்படுகிறேன் ...ஆனால், நான் போவதற்கு முன்பாக நீர் கொஞ்சம் உபவாசம் இருக்கவேண்டும். நீர் போதுமான அளவில் மெலியவில்லை" என்று கேலியும் கிண்டலுமாய் பேசியது சாத்தான்.

அதற்கு மேற்றிராணியார், "எனக்கு உனது புத்திமதி யெல்லாம் தேவையில்லை. கடவுளின் வல்லமையால் உன்னை வெளியேற்றுவேன். நமதாண்டவர் சேசு கிறீஸ்துவின் விலை மதிப்பில்லாத திரு இரத்தத்தால் உன்னை வெளியேற்றுவேன்" என்று பதிலளித்தார்.

"ஆம், நான் உமக்குக் கீழ்ப்படியவேண்டும்" என்று தன்னையே சிலிர்த்துக்கொண்ட சாத்தான், "இந்த மரியாதையை உமக்கு நான் தரவேண்டும் என்பதே என்னை நொறுக்குகிறது. இந்த 1200 ஆண்டுகளில் உம்மைப் போன்ற ஒரு மேற்றிராணியார் சாத்தான்களின் இளவரசனை இப்படி வெளியேற்றுவது இதுதான் முதல்முறை" என்று நயந்து கூறியது.

உடனே இடைமறித்த மேற்றிராணியார், "நீ ஒரு பொய்யன்" என்று கூறியவர் பின்னர் கம்பீரமாக "ஒவ்வொரு நாளும் பரிசுத்த ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை உன்மேல் வெற்றிக்கொள்கிறது. உனது அனைத்து நரகக்கூளிகளின் மீதும் வெற்றிப்பெற்று வருகிறது என்பதை நினைவில் கொள்" என்று கண்டித்துப் பேசினார்.

"நீர்தான் பெரிய பொய்யர். எனது 'shellpate' (இந்தப் பெயரில் சாத்தான் மேற்றிராணியாரை அழைத்தது) என்று பதில் கூறிய சாத்தான், "எளிய சுயமாக அறியப்படாத பேய்கள், குட்டிச்சாத்தான்களை வேண்டுமானால் வெளியேற்ற முடியும். ஆனால் பசாசுக்களின் இளவரசனை வெளியேற்ற முடியாது" என்றான்.

இப்போது மேற்றிராணியார் பெயேல்செபூப்பின் பெயர் எழுதப்பட்ட தாளைத் தீயிட்டு எரித்தார். ஆனால் சாத்தான் அவரைப் பார்த்து சிரித்தான். "ஹா! எனதருமை 'shellpate', நீர் எரித்தது வெறும் மையையும் தாளையும் மட்டுமே" என்று கேலியாகக் கூறியது.

இதனால் அங்கே கூடியிருந்த ஒவ்வொருவரும் திடுக்கிட்டுப்போனார்கள். ஏனெனில் இதுவரையிலும் இப்படி அவனது பெயரை எரிப்பது அவனுக்கு பயங்கரமான வேதனையைத் தந்திருந்தது. தொடர்ந்து மேற்றிராணியார், "அப்படியா? நீ பேயோட்டும் சடங்கிற்கும், ஜெபத்திற்கும், உனது பெயரை எரிப்பதற்கும் கவலைப்படமாட்டாய், அதற்கு செவிசாய்க்க மாட்டாய் தானே?! நான் உனக்கு உனது ஆண்டவரும் எஜமானவருமானவரைக் காட்டுகிறேன்" என்றார். அதற்கு சாத்தான், "ஆஹா! இப்போது நீர் யாரைச் சொல்லுகிறீர்?" என்றவன் கேலியாக, "உமது ...அந்த வெண்மை... யா? என்று கூறியது. ஆனாலும் உடனே சாத்தான் வெளியேற்றப்பட்டது. போகும்போது "நான் இப்போது போகிறேன். ஆனால் திரும்பவும் வருவேன். எனது நேரம் இன்னமும் வரவில்லை" என்று கூறியது.

மறுநாள் நிக்கோலா ஆலயத்திற்கு அழைத்துவரப் பட்டாள். உடனடியாக சாத்தான் அவளைப் பீடித்துக் கொண்டது. "ஹா! என்று கேலியாகக் கத்தியவன், நான் இன்னமும் போய்விடவில்லை" என்று கூறி முந்தின நாள் நடந்தவற்றைப்பற்றி கேலியாகப் பேசியது. பேயோட்டும் சடங்கு ஆரம்பமாகவே, மேற்றிராணியார், "நீ ஏன் இன்னமும் வெளியேற மாட்டேன் என்கிறாய்? அதற்காக நியமிக்கப்பட்ட நாளும் நேரமும் வரும்" என்றார்.

"நான் போக முடியாது. ஏனெனில் நீர் உபவாசம் இருக்கவில்லை. நீர் பாவசங்கீர்த்தனம் செய்யவில்லை. நான் போக முடியாது. அதற்கு இன்னமும் போதுமான சாட்சிகள் இங்கே இல்லை" என்று சாக்குப்போக்கு கூறியது சாத்தான்.

இப்போது மேற்றிராணியார் திவ்விய நற்கருணையை தமது கரங்களில் எடுத்தார். பக்தியோடு பேய் பீடித்த பெண்ணின் முகத்தருகே கொண்டுசென்றார். அதனால் வேதனையும் கொடூர துன்பமும் அனுபவித்த சாத்தான் எரிச்சலுடன், "ஓராயிரம் கோடிக்கணக்கான பேய்கள் உம்மை பீடிப்பதாக! ஏய்! கேடுகெட்ட shellpate! ஏன் என்னை இப்படி கொடூரமாய் வதைக்கிறீர்?" என்றுகேட்டது. இவ்வாறு அன்றைய சடங்கு முடிந்தது.

மறுநாள் காலையில் பவனியாக ஆலயத்திற்கு வந்தபின் திவ்விய பலிபூசை வழக்கம் போல் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பேய் பீடித்த பெண் ஆலயத்தின் நடுவே சிறு படுக்கையில் கிடத்தப்பட்டு கொண்டுவரப்பட்டாள். உடனே அவளைப் பீடித்திருந்த சாத்தான் சுற்றிலும் திரும்பிப் பார்த்து பின், "ஹா! இங்கே பாப்பு மதத்தவர்களே இருக்கிறார்கள். இங்கு கூட்டம் இன்னமும் முழுமையாகவில்லை. எங்கே அந்த மாஜிஸ்ட்ரேட் தூ மான்ஞ்ச்? நேற்று இரவு சிறைச்சாலையில் கைதிகளை கடுமையாக அடித்து நொறுக்கினானே! அரசாங்கத்தின் அட்டார்னி போசெட் (Bochet) எங்கே?! எங்கே பெரிய டீன்? இவர்கள் எல்லோரும் இங்கே வரும்வரையிலும் நான் வெளியேற மாட்டேன். திரு இரத்தத்தினால் அதற்கு நல்ல காரணங்கள் இருக்கின்றன" என்று கூறியது.

திடீரென்று சாத்தான் மௌனமாகிவிட, பேய் பிடித்த பெண் 6 அடி உயரத்திற்கு மேலே அந்தரத்தில் எழுந்து, பின்னர் படுக்கை மேடையின் மீது பொத்தென்று விழுந்தாள். அதே சமயம் பூசையில் அப்பரச வசீகர நேரமாக இருந்தது. இதனால் கோபாவேசப்பட்ட சாத்தான், "ஹே! மேற்றிராணியாரே! ஏய் shellpate! இதற்கு உம்மை என்ன செய்யப்போகிறேன் பாரும். நீர் என்னை கடுமையாக வாதிக்கிறீர்" என்று கூக்குரலிட்டது. (இது ஏனெனில், பசாசிற்கு அதிக துன்பம் வரவேண்டும் என்பதற்காகவே மேற்றிராணியார் வசீகர நேரத்தை சற்று நீடிக்கச் செய்தார்).

பூசையில் மேற்றிராணியார் பரலோக மந்திர ஜெபத்திற்கு முன்பு சிறிய எழுந்தேற்றத்திற்காக அப்பத்தை கிண்ணத்தோடு உயர்த்தி காட்டினார். அப்போது நிக்கோலா மீண்டும் 6 அடி உயரத்திற்கு மேலே எழுந்தாள். 15 பேர்கள் இருந்தும்கூட அவளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இந்தக் காட்சியினால் மக்கள் வியப்பிலும், அச்சத்திலும் ஆழ்ந்தனர். இதனைக் கண்ட ஒரு ஜெர்மானிய புரொட்டஸ்டாண்ட் உடனே மனந்திரும்பி னான். முழந்தாளிட்டு, கண்ணீர் சொரிந்து தனது தப்பறையை மறுக்கலானான். "ஆ! இந்தப் பாவப்பட்ட சிருஷ்டியை பசாசு உண்மையாகவே பீடித்திருக்கிறது என்பதை உறுதியாக நம்புகிறேன். சேசு கிறீஸ்துவின் சரீரமும், இரத்தமும் அவளை மெய்யாகவே பசாசிடமிருந்து வெளியேற்றும் என்று நம்பு கிறேன்.... விசுவசிக்கிறேன். நான் இன்னமும் ஓர் புரொட்ட ஸ்டாண்டாக இருக்கமாட்டேன்" என்று அறிக்கையிட்டான்.

## மெய்யான பிரசன்னம்

திவ்விய பலிபூசைக்குப் பிறகு, வழக்கம்போல் பேய் ஓட்டும் சடங்கு ஆரம்பமாகியது. மேற்றிராணியார் வந்தவுடனேயே சாத்தான் கேலியான குரலில், "ஹா! ஹா! எனது Shell-pate! இன்று அந்த தலைமைக் குருவிடம் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்தீர்தானே? நான் உம்மை பார்த்தேன். ஆனால் நீர் என்ன கூறினீர் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை" என்று ஆதங்கத்தோடு கூறியது.

அதைக் கேட்ட மேற்றிராணியார், "கடைசியாக நீ இப்போது வெளியேறத்தான் வேண்டும்" என்றார்.

அதற்கு,"ஆம்" என்று கூறிய சாத்தான்,"அது வாஸ்தவம் தான். நான் கண்டிப்பாக வெளியேறத்தான்வேண்டும். ஆனால் இன்றல்ல. இந்த பெண்ணை பீடித்துக்கொண்ட அந்த நேரத் திற்கு முன்பாக நான் போகப்போவதில்லை. பொறுமையாய் இரும். பகல் 3 மணி வரைக்கும் காத்திரும். ஆ! அந்த மணி நேரம் சபிக்கப்படட்டும். கடிகாரத்தின் முட்களை மாற்றி வைக்காதிரும். எனக்கு நேரம் எல்லாம் நன்றாகத் தெரியும். எனக்குரிய தீர்ப்பு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது" என்று கூறியது.

"சரி, நீ வெளியேறும்போது எந்த அடையாளத்தை தருவாய்?" என்று மேற்றிராணியார் கேட்க, அதற்கு சாத்தான் உடனே "அதைப்பற்றி கவலைப்படாதீர்" என்று கூறியபின் "போதுமான அடையாளங்களை நீர் பெறுவீர். இந்த சிருஷ்டியின் விளங்காமல் போன இடது கையை நான் குணமாக்குவேன். இந்த 3 மாதங்களாக அதனை அவளால் பயன்படுத்த முடியவில்லை. ஏனெனில் நான் அவளை ஆட்கொண்டிருக்கிறேன். நீ எனது Shell-pate! உமது அடையாளத்தைப் பெறுவீர். நீர் இதுவரையிலும் உணராத வகையில் உமது இருதயத்தை அச்சத்தால் தாக்குவேன். அதை நீர் அவ்வளவு சீக்கிரம் மறக்க முடியாததாக இருக்கும்" என்று ஆங்காரத்தோடும் சலிப்போடும் கூறியது.

அப்போது மேற்றிராணியார்,"சரி! நேற்று இரவு எங்கே இருந்தாய்?" என்று கேட்டார். அதற்கு "ஏன்? உமது வீட்டில் தான் இருந்தேன்" என்று பதிலளித்த சாத்தான் பின்னர் "உம்மை நன்றாகக் கவனித்தேன். கடந்த இரவு நீர் ஜெபிக்க எழுந்தீர். அது 3 மணியிருக்கும். என்னை வெளியேற்ற உமது ஜெபங்கள் அதிகமாக உதவி செய்யும் என்று நான் அறிவேன்" என்று கூறியது.

பேசிக்கொண்டிருந்த சாத்தானின் கவனம் அங்கே இருந்த லான் செலாட் என்ற கனவானின் மீது சென்றது. இடக்காக சிரித்த சாத்தான் அவரது சகோதரர் இராபர்ட் செய்த சில கனமான பாவங்களை பெயர் சொல்லி பகிரங்கமாக



அறிவித்தது. "ஆம்" என்று வெறுப்போடு கூவிய சாத்தான், "திரு இரத்தத்தின் ஆணையாக நான் கூறியது உண்மை. அவன் உமது சகோதரனாக இருந்தாலும் நான் சொல்லியது உண்மை" என்று கூறியவன் அருகில் நின்றிருந்த ஒரு பெண்மணி பக்கம் திரும்பி "ஹேறு! மார்க்கரேட்! நேற்றிரவு உனது கணவன் லான் செலாட் 2 டாலர் பணத்தை இழந்து போனான் தெரியுமா? அதை வாங்கியவர் யார் தெரியுமா? நெல்லி!" என்று இடக் காகக் கூறி கொக்கரித்துச் சிரித்தது.

அதைக் கேட்ட லான் செலாட் என்ற அந்த கனவான் வெட்கத்தால் தலையை கவிழ்த்துக்கொண்டான். அங்கிருந்த அனைவரும் ஆச்சரியப்பட்டார்கள். இப்படியே அங்கே இருந்தவர்களின் சில பாவங்களை வெளிப்படுத்தி அவர்களை வெட்கப்படுத்திக்கொண்டே இருந்தது.

இறுதியாக மேற்றிராணியார் திவ்விய நற்கருணையை கரத்தில் ஏந்தி "ஆசீர்வதிக்கப்பட்ட தமதிரித்துவத்தின் பிதா சுதன் இஸ்பிரீத்துசாந்துவின் பெயரால் இங்கே பிரசன்னமா யிருக்கும் சேசுவின் திரு சரீரத்தின் பெயரால் உனக்கு கட்டளை யிடப்படுகிறது. கெட்ட அரூபியே, உடனே வெளியேறு. நான் உனக்குக் கட்டளையிடுகிறேன் வெளியேறு" என்று கூறினார்.

உடனே, "என்ன!" என்று கூறி உடலை குலுக்கிக் கொண்ட சாத்தான், "உமது வெண்மை..... யைக்கொண்டு என்னை வெளியேற்ற விரும்புகிறீரா?" என்று கேட்கவும்; உடனே இடைமறித்த மேற்றிராணியார், "சபிக்கப்பட்ட அரூபியே!" என்று கோபத்துடன், "சர்வேசுரனை இப்படி தேவதூஷணம் கூற யார் உனக்குக் கற்றுக்கொடுத்து? வாயை மூடு!" என்று அதட்டினார்.

"வேறு யார்? நான்தான் எனது கால்வீனியர்களுக்குக் கற்றுக்கொடுத்தேன். அவர்கள் எனது கீழ்ப்படிதலுள்ள ஊழியர்கள்" என்றது சாத்தான். மேற்றிராணியார், "ஆனால் இங்கே பிரசன்னமாயிருப்பது உனது ஆண்டவரும், எஜமான வருமானவரின் திரு சரீரம். இது நமதாண்டவர் சேசு கிறீஸ்து வின் ஆசீர்வதிக்கப்பட்ட சரீரம். அவருடைய வல்லமையால் நீ வெளியேற்றப்படுவாய்" என்று அதட்டலாகக் கூறினார்.

"ஆம்! ஆமாம்! உண்மை!" என்று தலையை அசைத்த அந்த பேய், "அது உண்மையே. இது சர்வேசுரனின் சரீரம். நான் இதனை ஒப்புக்கொடுக்கும்படியாகக் கட்டாயப்படுத்தப் படுகிறேன். ஹா! இப்படி ஒப்புக்கொள்வது என்னை எப்படி வதைக்கிறது தெரியுமா? ஆனால், நான் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும். உண்மையை மட்டுமே பேசும்படி கட்டாயப்படுத்தப்படுகிறேன். உண்மை என்னிடமிருந்து வருவ தில்லை. அது எனது ஆண்டவரும், எஜமானருமானவ ரிடம் இருந்து வருகிறது. சர்வேசுரனின் அனுமதியின் பேரிலேயேதான் இந்தப் பெண்ணின் உடலில் நுழைந்தேன்" என்று கூறியது.

இப்போது மேற்றிராணியார் பரிசுத்த திவ்விய நற்கருணையை அசுத்த அரூபியால் பீடிக்கப்பட்டவளின் முகத் தருகே கொண்டுசென்றார். உடனே சாத்தான் அஞ்சத்தக்க வகையில் வேதனைக் கூக்குரலிட்டது. நற்கருணையில் நமதாண்டவரின் பிரசன்னத்திலிருந்து தப்பித்துவிட முயன்றது. அப்போது பெரிய கரும்புகை நிக்கோலாவின் வாயிலிருந்து வெளியேற, அவள் அப்படியே கீழே விழுந்து விரைத்துப் போனாள். பின்னர் திவ்விய நற்கருணையால் மீண்டும் சுயநினைவை பெற்றாள்.

### பிப்ரவரி மாதம் 8-ம் நாள்:

அன்று பிற்பகலில் நடைபெற்ற பவனியின்போது சாத்தான் மேற்றிராணியாரிடம், "ஓ! மேற்றிராணியாரே! எனது *Shell-pate!* இன்று நீர் சாப்பிடவில்லைதானே? சாப்பிடா விட்டால் நோய் வந்துவிடும்; களைப்படைந்து போவீர்" என்று கூறியபின், "ஹா! அவர் எதுவும் உண்ணவில்லை! இந்த கேடு கெட்ட சிருஷ்டியின் உடலிலிருந்து என்னை வெளியேற்று வதற்கு முன்பாக நீர் உபவாசம் இருக்கிறீர். அப்படித்தானே? ஹா!" என்று கேலியாகப் பேசி பாடல் போன்று பாடினான்.

பவனி முடிந்து ஆலயம் வந்ததும் நிக்கோலா வழக்கம் போல் ஆலய நடுவில் உள்ள மேடையில் கிடத்தப்பட்டாள். திமிறும் அவளை 15 வலிமையான மனிதர்கள் பிடித்திருந்தனர். மேற்றிராணியாரும் குருவானவரும் லத்தீனில் ஜெபங்களைச் சொல்ல அதில் சாத்தானை "சபிக்கப்பட்ட அரூபி" என்று அழைக்கும்போதெல்லாம் சாத்தான் ஆங்காரமாக கோபா வேசத்துடன், "ஏய்! ஏன் சபிக்கப்பட்ட என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறீர்?!" என்று கத்தியது.

அதற்கு மேற்றிராணியார், "ஏனெனில், நீ ஒருபோதும் மன்னிப்பு பெற முடியாதபடி சர்வேசுரனை வேதனைப் படுத்திவிட்டாய். நீ நித்தியத்திற்கும் சிநேகத்தையும், நம்பிக்கையையும் இழந்துவிட்டாய். நீ நித்திய நரகத்தில் வாழ்வதற்கே உரியவன். உனக்கான தீர்ப்பு எப்போதோ விதிக்கப்பட்டுவிட்டது" என்று கூறினார்.

இந்த வார்த்தைகளைக் கேட்ட சாத்தான் மௌன மாகியது. முகத்தைத் திருப்பிக்கொண்டது. இப்போது மேற்றிராணியார் பேயோட்டும் சடங்கின் ஜெபங்களை கம்பீரமாகச் சொல்லத் துவங்கினார். பேயோட்டத்தின் போது இடையிடையே சாத்தான், "ஏய்! மேற்றிராணியாரே இன்று நீர் சாப்பிடவில்லை! நீர் பலவீனமாய் இருக்கிறீர்! களைப் படைந்து போவீர்!" என்று கூறி இடையூறு செய்தது. பிறகு, சுற்றிலும் திரும்பி, "ஹா! ஹா! அட்டார்னி ஜெனரல் போசிசே நீர் இங்கேயா இருக்கிறீர்? இன்று காலையில் நீர் இங்கே இல்லையே!" என்று இடக்காகக் கூறியது.

இப்படி கூறியபின் மேற்றிராணியாருக்கு அருகில் ஏற்றிவைக்கப்பட்டிருந்த மந்திரித்த மெழுகுதிரியை ஊதி அணைத்தது. பின்னர் கேலியாக சிரித்துக்கொண்டு, "ஹா! ஹா! இந்தப் பட்டப்பகலிலா மெழுகுதிரியை எரிய விடுவார்கள்? சரியான முட்டாள் நீர்" என்று கேலியாகக் கூறியது.

இப்போது மேற்றிராணியார் சுவிசேஷத்தையும் ஜெபங்களையும் வாசித்து பேயோட்டும் சடங்கில் ஈடுபட்டார். "பெயேல் செபூப்" என்று பெயர் எழுதப்பட்ட தாளை எரித்து பாடுபட்ட அர்ச். சிலுவை மரத்தின் அருளிக்கத்தை நீட்டிக்

காண்பித்து, வெகு கம்பீரமான தொனியில் அதனை வெளியேறும்படியாகக் கட்டளையிட்டார். ஆனால் அதற்கு எந்தவிதமான சலனத்தையும் காட்டவில்லை சாத்தான். ஆகையால் மேற்றிராணியார் மீண்டும், "நான் இன்னமும் இருக்கக்கூடாது என்று உன்னை கேட்கவில்லையா? வெளியேற உனக்கு எண்ணமில்லாத பட்சத்தில் சர்வேசுர னுடையவும் இங்கே பீடத்தில் தேவதிரவிய அநுமானத்தில் பிரசன்னமாயிருக்கும் அவரது நேச குமாரன் சேசு கிறீஸ்துவின் விலைமதிப்பில்லாத திரு இரத்தம், சரீரத்தின் வல்லமையால் உன்னை உடனே வெளியேற்றுவேன்" என்று கடுமையாகக் கூறினார்.

"ஹா, ஆம்!" என்று சிலிர்த்துக்கொண்ட சாத்தான் "இங்கே தேவ குமாரன் உண்மையிலும் உண்மையாக பிரசன்னமாயிருக்கிறார் என்பதை அறிக்கையிடுகிறேன். அவர் எனது ஆண்டவரும் எஜமானவருமானவர். இதைச் சொல்வது எனக்கு கொடிய வேதனையைத் தருகிறதே. ஆனாலும் நான் அப்படிச் சொல்லும்படி கட்டாயப்படுத்தப்படுகிறேன்" என்று கத்தியது, பதறியது. இதனையே மீண்டும் மீண்டும் பல தடவைகளில் பயங்கரமான உலகத்தில் கேட்க முடியாத கொடூரமான குரலில் கூறியது. மீண்டும் ஊளையிட்டு, "ஆம். இது உண்மை, சத்தியம்! நான் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இங்கே பிரசன்னமாயிருக்கும் சர்வேசுரனின் சரீரத்தின் வல்லமையால் நான் வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப் படுகிறேன். இந்த சத்தியத்தை வெளியிடவேண்டும் என்பதைப்பற்றியும், விரைவில் வெளியேறுவேன் என்ற யதார்த்தமும் என்னை கொடூரமாய் வதைக்கிறது. ஆனால் இந்த உண்மை என்னிடமிருந்தல்ல, இங்கே என்னை அனுப்பினவரும், சத்தியங்களை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ள அறிக்கையிட என்னைக் கட்டாயப்படுத்தியும் கட்டளை யிடுபவருமான எனது ஆண்டவரும், எஜமானருமானவரிட மிருந்தே வருகிறது. நான் போய்விடுவேன். ஆனால் வெறும் கையனாகப் போகமாட்டேன். கொள்ளையடிக்கப்பட்ட என் பொருட்களை கொண்டு செல்வேன். நான் செல்லும்போது இந்த விர்வின்ஸ்கின் (அவ்வூரில் புகழ்பெற்ற பதிதன்) தலையை கொய்துகொண்டு செல்வேன். ஒருவேளை எனது கால்வீனியர்களில் சிலர் உடல், ஆன்மா எனக்குச் சொந்த மாதலால் அவர்களையும் என்னுடன் கொண்டு செல்வேன். ஹா! உமது தலையைத் தாரும்!" என்று ஆக்ரோஷமாய் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தவாறு மேற்றிராணியாரை நோக்கி திரும்பியது. "ஏய்! என்னால் தூக்கிச் செல்ல முடியுமா முடியாதா என்பதை பார்ப்போமா?" என்று கோப வெறியோடு கூப்பாடு போட்டது.

உடனே மேற்றிராணியார் "இல்லை, முடியாது!" என்று இடைமறித்தவர், "நீ வெளியேறும்போது எதையும் எடுத்துச்செல்லக் கூடாது. இந்த மனிதர்கள் ஞானஸ்நானம் பெற்றவர்கள். அவர்களை நீ தொடக்கூட முடியாது" என்று குரலை உயர்த்திக் கூறினார்.

உடனே, "ஆமாம்!" என்று கத்திய சாத்தான் திடீரென்று குரலை கேலியாக மாற்றி, "அவர்கள் ஞானஸ்நானம் பெற்றவர்கள். ஆனால் அதில் என்னை மறுதலிப்பதாகக் கூறிய பின்னர் தங்களையே எனக்கு மீண்டும் தந்து விட்டவர்கள். ஆகையால் அவர்கள் என்னுடையவர்கள். உண்மையாகவே அவர்கள் என்னுடையவர்கள்" என்று கூறி உரிமைப் பாராட்டியது.

"வாழும் சர்வேசுரனின் நாமத்தில் நான் உனக்கு தடை விதிக்கிறேன்" என்று ஆணையிட்ட மேற்றிராணியார், "இங்கே இருப்பவர்கள் யாருக்கும் - எவருக்கும் நீ தீங்கு செய்வதை நான் தடைசெய்கிறேன்!" என்று அதிகாரத்தோடு கூறினார்.

பின்னர் மேற்றிராணியார் திவ்விய நற்கருணையை தன் கரங்களில் எடுத்துக்கொண்டு உயரே தூக்கிப் பிடித்து கொண்டார். பின் கம்பீரமான குரலில், "ஓ! கெட்ட அசுத்த அரூபியே! பெயேல்செபூப்! நீ நித்திய கடவுளின் பிரதான எதிரி! இதோ உனது ஆண்டவரும் எஜமானருமான நமதாண்டவர் சேசு கிறீஸ்துவின் விலைமதிப்பில்லா சரீரமும் இரத்தமும் இங்கே பிரசன்னமாகியுள்ளது... நான் இங்கே பிரசன்னமாயிருக்கும் மெய்யான தேவனும், மெய்யான மனிதருமான நமதாண்டவரும் மீட்பருமான சேசு கிறீஸ்துவின் வல்லமையாலும் அவரது நாமத்தினாலும் நான் உனக்கு ஆணையிடுகிறேன். சர்வேசுரனின் இந்த சிருஷ்டியைவிட்டு நிரந்தரமாக உடனே வெளியேறும்படியாக நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். உடனே நித்திய தண்டனையை அனுபவிக்கும்படியாக நரகத்தின் ஆழமான பாதாளத்துக்குச் செல். போ அசுத்த அரூபியே. இங்கே இதோ உனது ஆண்டவரும், எஜமானருமானவர் இருக்கிறார். உடனே போ!" என்று கடுமையானக் குரலில் கூறினார்.

இந்த கம்பீரமான அதிகாரத் தோரணையிலான வார்த்தைகளாலும், நமது நற்கருணை ஆண்டவரின் பார்வையிலும் பேய் பிடித்த அந்த பாவப்பட்ட பெண் பயங்கரமாகத் திமிரலானாள். அவளது ஒவ்வொரு எலும்பும் உடைந்துவிடுவது போல் உடல் முறுக்கப்பட்டது. 15 வலிமை யான மனிதர்கள் அவளைப் பிடித்து மீண்டும் படுக்கையின்மீது வைப்பதற்குப் பெரும்பாடு படவேண்டியிருந்தது. அங்கும் இங்குமாக அவர்கள் உலுக்கப்பட்டார்கள். வியர்வை அருவியாக வடிய கெட்டியாக அவளைப் பிடித்தார்கள். இப்போது நிக்கோலாவின் வாய் திறக்கப்பட்டு அவளது நாக்கு வெளியே வந்து அவளது கன்னம் வரையிலும் நீண்டு தொங்கியது. முகம் வீங்கி அகோரமாய் காணப்பட்டது. அவளது உடல் மஞ்சள் நிறத்திலிருந்து பச்சை நிறத்திற்கும், இளம் சிவப்பு நிறத்திற்குமாக மாறி மாறித் தோற்றமளித்தது. அவள் ஒரு மனிதப்பிறவி போலல்லாமல், ஒரு மிருகமாகவே காணப்பட்டாள். இதைக் கண்ட சுற்றிலும் நின்றவர்கள் அச்சத்தால் நடுநடுங்கிப் போனார்கள். சாத்தான் போட்ட காட்டுக் கூச்சலைக் கேட்டதும் பயந்துபோனார்கள். ஒரு அடங்காத காட்டு எருமையின் கோப வெறிகொண்ட உருவமாக இருந்த சாத்தானின் கூச்சலைக் கேட்டு எல்லோரும் நடுங்கினார்கள்.

உடனே அனைவரும் முழந்தாளிட்டு கண்ணீர் பெருக. சேசுவே, எங்கள்மீது இரக்கமாயிரும்! என்று பதறி மன்றாட லானார்கள். அதே சமயம் மேற்றிராணியார் சாத்தானை

வெளியேறும்படி துரிதப்படுத்தினார். இறுதியாக அந்த கொடிய அசுத்த அரூபி வெளியேறியது. அப்போது நிக்கோலா அவளைப் பிடித்திருந்தவர்களின் கரங்களில் உணர்வற்று அப்படியே பின்னிட்டு விழுந்தாள். அவளது உடல் இன்னமும் துடிதுடித்துக்கொண்டிருந்தது. அவளது உடல் ஒரு பந்து போல் உருண்டது. இப்போது மேற்றிராணியார் முழந்தாளிட்டு அவளுக்கு வழக்கம்போல் திவ்விய நற்கருணையை வழங்க முற்பட்டார். ஆனால் அந்தோ! திடீரென்று சாத்தான் திரும்பி வந்தது. கடுமையான கோப வெறியோடு திரும்பிய சாத்தான் திவ்விய நற்கருணையை ஏந்தியிருந்த மேற்றிராணியாரின் கையைப் பற்றி நற்கருணையைப் பறிக்க முயன்றது. இதனால் மேற்றிராணியார் பின்னோக்கி நகர, நிக்கோலா இப்போது அப்படியே அந்தரத்தில் மிதக்கலானாள். இந்த பயங்கரமான காட்சியைக் கண்ட மேற்றிராணியார் உடல் நடுங்க நற்கருணையைக் காப்பாற்ற மெல்ல எழ முயன்றார். அவர் மீண்டும் தமது திடத்தை வரவழைத்துக்கொண்டவராக, சாத்தானோடு போராடினார். நிக்கோலாவை பிடித்திருந்த வர்கள் அவளது திமிறலால் சிதறி விழுந்தார்கள்.

அங்கே கூடியிருந்தவர்கள் அந்த பயங்கரக் காட்சியை கண்டு நடுநடுங்கி சர்வேசுரனின் உதவியைக் கேட்டு .

உருக்கமாக மன்றாடினர். இப்போது சாத்தான் மேற்றிராணியாரின் கரத்தை விடுவித்து இடி இடிக்கும் ஓசையை எழுப்பியவாறு வெளியேறியது. திடீரென மீண்டும் கோப வெறியோடு வந்த அது அங்கு நின்றிருந்த சில கால்வீனியப் பதிதர்களை ஆங்காரத்தோடு பார்த்தது. அவர்கள் தங்கள் தலையை மூடியிருந்தார்கள்.

உடனே மக்கள் அவர்களைப் பார்த்து, "முழந்தா ளிடுங்கள். உங்கள் தலையை மூடாதீர்கள். முழந்தாளிட்டு நமதாண்டவர் சேசு கிறீஸ்துவின் விலைமதிப்பில்லாத திரு சரீரத்தினுடையவும் இரத்தத்தினுடையவும் சமுகத்தில் மண்டியிடுங்கள். தலையை மூடாதீர்கள்" என்று கூறினார்கள்.

இந்த வார்த்தைகளைக் கூறி முடித்ததும்தான் தாமதம் "ஆயுதத்தை எடு! ஆயுதத்தை எடு!!" என்ற காட்டுக் கத்தல் கேட்டது. அங்கே ஒரு கணம் குழப்பம் நிலவியது.

அங்கேயிருந்த கத்தோலிக்க மக்கள் கால்வீனிச பதிதர்கள்தான் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு தங்களைக் கொல்ல ஆலயத்திற்குள் வந்துவிட்டார்களோ என்று நினைத் தார்கள். ஆனால் கால்வீனியர்களோ மரண பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். இத்தகைய அச்சமும், குழப்பமும் ஒரு விதத்தில் அந்த நகரம் முழுவதிலும் பரவியது. நகர மக்கள் ஒவ்வொருவரும் இனந்தெரியாத அச்ச உணர்வு கொண்டனர். இந்த திடீர் நிகழ்விற்குரிய உண்மையான காரணங்களை அறிய முடியாது நகர மக்கள் திகைத்தனர்.

ஆலயத்தில் மேற்றிராணியார் அமைதியாக தன் இடத்தில் நின்றார். கையில் திவ்விய நற்கருணையை இன்னமும் ஏந்தியிருந்த அவர் அங்கே கூடியிருந்த மக்களிடம் உரத்தக் குரலில் "எனது நண்பர்களே, பயப்படாதீர்கள். நீங்கள் இருக்கும் இடத்திலேயே இருங்கள். இங்கே நமதாண்டவரின் மெய்யான திரு சரீரம் உள்ளது. அவர் நமக்கு உதவி செய்வார்; முழந்தாளிட்டு அவரை ஆராதித்து ஜெபியுங்கள். யாரையும் தாக்கவேண்டாம் என்று சர்வேசுரனின் திருநாமத்தில் உங்களை தயவாய் கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறினார்.

அவர் அவ்வாறு கூறியதும், உடனே அங்கு அமைதி நிலவியது. அனைவரும் முழந்தாளிட்டு பேய் பிடித்த பெண்ணிற்காக ஜெபிக்கலானார்கள். மேற்றிராணியார் இப்போதும் கரத்தில் நற்கருணையை ஏந்தியவாறு சாத்தானை எச்சரித்துக்கொண்டிருந்தார். நமதாண்டவரின் திரு சரீரத்தின் வல்லமையால் அது மேற்கொள்ளப்படும் வரையிலும், வெளியேறும்படி உத்தரவிட்டுக்கொண்டே இருந்தார். இறுதியாக சாத்தான் இடி மின்னலை ஏற்படுத்தி புகை மூட்டத்தினூடே வெளியேறியது.

ஒரு வழியாக சாத்தான் அகற்றப்பட்டது! அன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியாக இருந்தது! நமதாண்டவர் தமது ஆசீர்வதிக்கப்பட்ட மரணத்தின் மூலம் நரகத்தை வெற்றிக்கொண்ட அதே நாள். அதே மணிநேரத்தில் அது வெளியேற்றப்பட்டது.

இப்போது நிக்கோலா முழுவதும் குணமாக்கப்பட் டிருந்தாள். முழந்தாளிட்டு சர்வேசுரனுக்கும், அந்த நல்ல மேற்றிராணியாருக்கும் நன்றி கூறினாள். அங்கே கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சியினால் விம்மி அழத் துவங்கியவர்கள் சர்வேசுரனுக்கும், திவ்விய நற்கருணையில் நமதாண்ட வருக்கும் நன்றிக் கீதம் பாடத் துவங்கினார்கள்.

"ஆ! எத்தகைய ஒரு புதுமை! ஆ! நான் என் கண்ணாலேக் கண்டேன். சர்வேசுரா உமக்கு நன்றி! பீடத்தின் தேவதிரவிய அநுமானத்தில் நமதாண்டவர் சேசு கிறீஸ்துவின் உண்மை பிரசன்னத்தின் மீது இப்போது யார்தான் சந்தேகம் கொள்ள முடியும்?" என்ற ஆச்சரியக் குரல்கள் எங்கும் கேட்டன.

அங்கேயிருந்த அநேக புரொட்டஸ்டாண்டார் "திவ்விய நற்கருணையில் ஆண்டவரின் பிரசன்னத்தை இப்போது விசுவசிக்கிறோம். எங்கள் கண்ணால் கண்டு கொண்டோம். இனியும் ஒரு கால்வீனிஸனாக இருக்க மாட்டேன். இந்தத் தப்பறையில் இதுவரையில் நான் இருக்கக் காரணமானவர்கள் சபிக்கப்படுவார்கள். ஆ! இப்போது திவ்விய நற்கருணையின் உந்நதத்தைப் புரிந்துகொண்டோம்" என்று கூறினார்கள். அங்கேயிருந்த அனைத்து பதிதர்களும் மனந்திரும்பினார்கள்.

அங்கே நன்றி கீதம் *(Te Deum)* பாட்டாக இசைக் கருவிகளால் இசைக்க, ஆலய மணிகள் மகிமையாக அடிக்கத் துவங்கின. எங்கும் மகிழ்ச்சி நிலவியது.

**– முற்றும் –**